2023 மார்ச் 29]

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். நான் முதல்வன் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியைச் சார்ந்த 10 கோரிக்கைகளில் குறிப்பிட்டுள்ள, திருப்பத்தூர் நகராட்சிப் பகுதியில் 110 கே.வி. துணை மின் நிலையமும், கந்திலி ஒன்றியப் பகுதியில் 33/11 கே.வி. துணை மின் நிலையமும் அமைக்க அரசு முன்வருமா எனக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதியில் இரண்டு துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு துறை நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஒன்று, கந்திலி பகுதியில் தரம் உயர்த்தக்கூடிய பணிக்கு நிருவாக அனுமதி பெறுவது செயல்முறையில் உள்ளது. அதேபோல, நத்தம் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குத் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன. எனவே, இரண்டு துணை மின் நிலையங்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி இந்த ஆண்டு அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

68—

துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

***50420—திரு. S. ஜெயக்குமார்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2023 மார்ச் 29

(அ) ஊத்துக்குளி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சியில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சியில் பள்ளகவுண்டம்பாளையம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. பள்ளகவுண்டம்பாளையம் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் விஜயமங்கலம் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகின்ற காரணத்தால், பள்ளகவுண்டம்பாளையம் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தும் சாத்தியக்கூறுகள் தற்போது ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார் அவர்கள்.*

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரை வணங்கி, எங்களுக்கும் காலம் வரும், காலம் வந்தால் வாழ்வு வரும், (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்வு வந்தால் தமிழகத்தையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றரைக் கோடி தொண்டர்களையும் வாழவைப்பேன் என சூளுரைத்து, தடைகளைத் தகர்த்தெறிந்து கழகப் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கும் எங்கள் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்தி வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை தொகுதிக்குட்பட்ட, ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றிய, நடுப்பட்டி துணை சுகாதார நிலையம், சேலம்–கொச்சின் தேசிய நெடுஞ்சாலை அருகே பள்ளகவுண்டம்பாளையம் என்ற கிராமத்தில் அமைந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில், விஜயமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதிக்குட்பட்ட விஜயபுரி, கம்பளியம்பட்டி,

2023 மார்ச் 29]

மேட்டுப்புதூர் சின்னவீரசங்கிலி, பெரியவீரசங்கிலி, கராண்டிபாளையம் போன்ற கிராம ஊராட்சிகளினிடையே அமைந்துள்ளது. அங்கு மக்கள் அதிகளவில் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பயன்படுத்தி வருகின்றார்கள். எனவே, எங்கள் பகுதியைச் சுற்றியுள்ள நடுப்பட்டி, கஸ்தூரிபாளையம், காவுத்தம்பாளையம், குவனம்பட்டி, செங்காளிபாளையம், புத்தூர் பள்ளப்பாளையம், புஞ்சைதுறையம்பாளையம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், எந்த இடத்தில் என்ன வேண்டுமென்று நேராக கேள்விக்கு வாருங்கள்.

திரு. S. ஜெயக்குமார்: போன்ற ஊராட்சிகளுக்குட்பட்ட 40-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் இந்த துணை சுகாதார நிலையத்தை சிகிச்சைக்காக பயன்படுத்தி வருகின்றனர். எனவே, இப்பகுதி மக்கள், மேல்சிகிச்சைக்காக, 10 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள குன்னத்தூர், ஊத்துக்குளி ஆகிய பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தேடிச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, ஊத்துக்குளி வட்டாரத்தில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மட்டுமே உள்ளதால், மேற்சொன்ன நடுப்பட்டி துணை சுகாதார நிலையத்தை, ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், இரண்டு மாவட்டங்களில் வருகிறது. ஊத்துக்குளி ஒன்றியம் என்பது திருப்பூர் மாவட்டத்திலும், மற்ற ஒன்றியங்கள் ஈரோடு மாவட்டத்திலும் வருகின்றன. ஒரு சட்டமன்றத் தொகுதி இரண்டு மாவட்டங்களில் வருவது பெருந்துறை சட்டமன்றத் தொகுதியாக இருக்கிறது. அந்த நிலையில்தான், ஊத்துக்குளி ஒன்றியத்தில் உள்ள நடுப்பட்டி ஊராட்சியில் அமைந்திருக்கின்ற பள்ளகவுண்டம்பாளையம் துணை சுகாதார நிலையத்தை இ-சஞ்சீவினி முறையில் ஏற்கெனவே, 5 கிலோ

மீட்டர் தொலைவில் இயங்கி கொண்டிருக்கின்ற விஜயமங்கலம் பகுதியில் இருக்கின்ற மருத்துவமனையோடு இணைக்கும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, உறுப்பினர் சொல்வது போன்று, 10 கிலோ மீட்டர் என்பது ஈரோடு மாவட்டத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சொல்கிறார். நான் சொல்வது திருப்பூர் மாவட்டத்தில் இருக்கின்ற விஜயமங்கலம் பகுதி 5 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. ஒன்றிய அரசின் விதிமுறைகளில், 8 கிலோ மீட்டர் இடைவெளியில் இன்னொரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமையக் கூடாது என்று உள்ளது. இயற்கையாகவே அவரது தொகுதி என்பது இரண்டு மாவட்டங்களில் அமைந்திருக்கக்கூடிய தொகுதியாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், கேள்வியை மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள்.*

முற்பகல் 10–45

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஜயமங்கலம் என்பது ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட, விஜயபுரி ஊராட்சிக்குட்பட்ட பகுதி. அதேபோல, ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி என்பது சேலம், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் வளர்ந்துவரக்கூடிய தொகுதியாக உள்ளது. பெருந்துறை நகரை ஒட்டியுள்ள கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் நாளது வரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதற்கு அருகாமையிலே தனியார் பங்களிப்புடன்கூடிய 1.50 ஏக்கர் இடமும் தயாராக உள்ளது. எனவே ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யவேண்டும். மேலும், எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காஞ்சிக்கோவில் பேரூராட்சி, பெத்தாம்பாளையம் பேரூராட்சி, பள்ளபாளையம் பேரூராட்சி உள்ளிட்ட பேரூராட்சிகளை உள்ளடக்கிய காஞ்சிக்கோவில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவசர தேவைக்காக 108 ஆம்புலன்ஸ் சேவையும், நல்லாம்பட்டி பேரூராட்சி மற்றும் 18 கிராமங்களை உள்ளடக்கிய, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், எத்தனை கேள்விகள்?*

2023 மார்ச் 29]

திரு. S. ஜெயக்குமார்: *திங்களூர் வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் அவசரத் தேவைக்காக 108 ஆம்புலன்ஸ் சேவையும் தற்போதைய நிலையில் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவற்றை வழங்குவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே, 48 துணை சுகாதார நிலையங்களும், 8 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 2 நடமாடும் மருத்துவ வாகனங்களும் இருந்து கொண்டிருக்கின்றன. அவை மட்டுமல்லாது, இரண்டு வட்ட மருத்துவமனைகள் இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் மேலாக ஓர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் அந்தத் தொகுதியில்தான் இருக்கிறது. இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலைப் பெற்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதாகவும் அதற்கு சொந்தக் கட்டடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார், அதைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

ஏற்கெனவே 'Hospital on Wheels' *என்கின்ற வகையில் இரண்டு நடமாடும் வாகனங்கள் இருக்கின்றன. இரண்டு 108 வாகனங்களைக் கேட்டிருக்கிறார். அவற்றையும் அங்கே புதியதாக ஏற்படுத்தித் தருவதற்கான நடைமுறை மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி (கிழக்கு) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழப்புலிவார் ரோடு, இப்ராகிம் பார்க்கில் அமைந்திருந்த, கொடும்பலூர் பிரசவ மருத்துவமனை* EB *ரோடு பகுதியில் உள்ள பீரங்கிகுள பகுதிக்கு மாற்றிவிட்ட*

காரணத்தினால் தற்சமயம் அந்த மருத்துவமனை செயல்படாமல் பூட்டப்பட்டுள்ளது. மக்கள் மருத்துவ சிகிச்சைக்காக GH மகாத்மா காந்தி நினைவு மருத்துவமனைக்கு வரவேண்டியுள்ளதால் அங்கு மக்கள் கூட்டத்தைக் குறைக்கின்ற வகையில் கொடும்பலூர் மருத்துவமனையை அனைத்து வசதிகளையும் கொண்ட Multispeciality Hospital ஆக மாற்றித் தந்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர இயலுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேசமயம், நீண்ட காலமாக அந்த GH–க்கு lift வசதி இல்லாமல் இருந்தது. அதைப் பெற்றுத் தந்தமைக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்து, இந்த Multispeciality Hospital–ஐயும் உருவாக்கித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை Multispeciality Hospitals ஏற்கெனவே ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் தற்போது மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க கலைஞர் நினைவு பன்னோக்கு மருத்துவமனை கிண்டியிலும் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, தமிழ்நாட்டில் இரண்டுதான் அமைந்திருக்கின்றன. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஆசைதான்; அவரவர்களுடைய தொகுதியிலும் ஒரு Multispeciality Hospital வேண்டுமென்பது; இருந்தாலும், தேவைக்கேற்ப மருத்துவக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.

திருமதி க. சிவகாமசுந்தரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி, மைலம்பட்டி அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவ வசதி இல்லாததால் இப்பகுதி மக்கள், மகப்பேறு மருத்துவத்திற்காக 35 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அல்லது 30 கிலோ

2023 மார்ச் 29]

மீட்டர் தொலைவிலுள்ள குளித்தலை அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியதாகயிருக்கிறது. ஆகவே, கடவூர் வட்டாரப் பகுதி, கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளம் தாய்மார்களின் சிரமங்களைக் கருத்தில்கொண்டு, மைலம்பட்டி அரசு மருத்துவமனையை ஒருங்கிணைந்த அவசரகால அரசு தாய்–சேய் நல மையமாக மாற்றி, 24 மணி நேரமும் மகப்பேறு மருத்துவம் பார்க்கும் வகையில் மகப்பேறு மருத்துவர்கள் நியமனம் செய்ய வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைலம்பட்டி அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவத்திற்கான சிகிச்சைப் பிரிவு ஒன்று புதியதாகத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கொரோனா தொற்றுக் காலத்தில் தொண்டுள்ளத்தோடு மருத்துவப் பணி செய்த டாக்டர்களுக்கும், செவிலியர்களுக்கும் வழங்கப்பட்ட உணவு, அவர்கள் தங்கியிருந்த விடுதிகளுக்கும்,* Restaurant*–களுக்கும்–உணவு விடுதிகளுக்கும் இன்னும் உரிய பணத்தைத் தரவில்லை என்ற செய்தி என்னிடம் தரப்பட்டது. இதுகுறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சட்டமன்றத்தில் இதுசம்பந்தமாக நாம் பலமுறை விவாதித்திருக்கிறோம். நியாயமான*

கட்டணத்தையும், நியாயமான உணவு வகைகளை வழங்கிய அந்த நியாயமான bill எல்லாம் settle செய்தாகிவிட்டது. அநியாயமான வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) ஓட்டலே இல்லாமல் வெறும் உணவு supply செய்ததாகத் தரப்பட்ட bill, அதைமட்டும்தான் settle செய்யாமல் வைத்திருக்கிறார்கள். அதுவும்கூட ஆய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. உண்மையிலேயே உணவைத் தரமாக வழங்கியிருப்பார்கள் என்றால் அதற்கான bill settle செய்யப்படும். அதுமாதிரி ஏதாவது இருந்தால் மாண்பிற்கினிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அதுகுறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.*

திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி அரசு பொது மருத்துவமனை மிகப் பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இப்போது சிதலமடைந்து இருக்கிறது. இம்மருத்துவமனையில் 50–க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயனடைந்து கொண்டிருக்கின்றன. புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அந்த மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துவது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய அறிவுறுத்தலைப் பெற்று அங்கே இருக்கிற மாவட்ட அரசு மருத்துவர்களின் கருத்துருக்களையும் பெற்று நிச்சயம் நிறைவேற்றித் தருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*